செ.வெ.எண். 37/ 2021 நாள்: 15.08.2021

**திருப்பூர் மாவட்டம்.**

**சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற 75- வது சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்வினீத் இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.**

**சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் கொரோனா தடுப்பு பணியில் பணியாற்றிய 175 முன்கள பணியாளர்கள், அரசு அலுவலர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் 213 பயனாளிகளுக்கு ரூ.7.25 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் 75-வது சுதந்திர தின விழாவில், திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, காவல் துறையினரின் அணிவகுப்பினை பார்வையிட்டு, அணிவகுப்பு மரியாதையினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டார். பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் வெண்புறாக்களையும், பலுான்களையும் பறக்கவிட்டார். தொடர்ந்து, கொரோனா வைரஸ் (கோவிட்-19) தடுப்பு பணியில் ஈடுபட்ட காவல் ஆணையாளர் அலுவலகம் 35, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் 34, என மொத்தம் 69 காவல்துறையினருக்கு பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்கள் 106 முன்களப்பணியாளர்கள் மற்றும் சிறப்பாக பணிபுரிந்த அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு என மொத்தம் 175 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இன்றைய விழாவில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 பயனாளிகளுக்கு ரூ.7,650 மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிளும், வருவாய்த் துறையின் சார்பில், 1 பயனாளிக்கு ரூ.12,000 மதிப்பிலான விதவை உதவித்தொகையினையும், பிற்படுத்தப்பட்டோர், சிறுபாண்மையினர் நலத்துறையின்சார்பில் 1 பயனாளிக்கு ரூ.4,380 மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரமும், 1 பயனாளிக்கு ரூ.5,342 மதிப்பில் விலையில்லா சலவை பெட்டியும், 1 பயனாளிக்கு ரூ.60,000 மதிப்பில் இலவச வீட்டுமனைப் பட்டாவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் 1 பயனாளிக்கு ரூ.72,000 மதிப்பில் இலவச வீட்டுமனைப் பட்டாவும்,

வேளாண்மைத்துறை, மற்றும் தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.10,98,233 மதிப்பில் வேளாண் உபகரணங்களும், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.4,04,65,000 மதிப்பிலான நீட்ஸ்

திட்டத்தின் கீழ் கடனுதவியினையும் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மகளிர்த்திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.27,50,000 மதிப்பில் பெருங்கடன் உதவியும் மற்றும் 1 பயனாளிக்கு ரூ.1,00,000 மதிப்பில் கடன் இனைப்பு நலத்திட்டம் என 15 பயனாளிகளுக்கு ரூ.4,45,74,605 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் மற்றும் இதர துறைகள் மூலம் ரூ.2,81,31,113 மதிப்பீட்டில் என மொத்தம் ரூ.7,27,05,718 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் , இ.ஆ.ப அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில், மாவட்ட முதன்மை நீதபதி திருமதி.ஸ்வர்ணம் ஜெ.நடராஜன், திருப்பூர் மாநகர காவல்துறை ஆணையர் திருமதி.வே.வணிதா இ.கா.ப. அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சஷாங்சாய் இ.கா.ப.,அவர்கள், தாராபுரம் சார் ஆட்சியர் திரு. ஆனந்த் மோகன் இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, திருப்பூர் மாநகர காவல் துணை ஆணையர்கள் திரு.எஸ்.அரவிந்த இ.கா.ப. திரு.பி.ரவி, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.லட்சுமணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. சாகுல் ஹமீது, வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.ஜெகநாதன் (திருப்பூர்), செல்வி.கீதா (உடுமலைப்பேட்டை), மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ரமேஷ்குமார், துணை ஆட்சியர்கள், காவல்துறையினர், அனைத்து துறை அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்.**